1973 நவம்பர் 21]

கட்டணத்தின் மூலமாகவும் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், பராமரிப்பது, இன்னும் மற்ற வகைகளில் அந்தச் செயற் குழுவைச் சேர்ந்தவர்கள் கவனிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் கலந்து அதை ஒரு துணை தொல் பொருள் ஆய்வுக் கூடமாக அமைக்கலாமா என்ற கருத்து இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கலந்து முடிவு எடுக்க முயற்சிக்கப்படும்.

College Text Books for Libraries

*9 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that College Text-Books have been purchased for the libraries of the Government High Schools; and

(b) if so, the reason for the same?

நூலநிலையங்களுக்குக் கல்லூரிப் பாடத் தரமுள்ள நூல்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்குக் கல்லூரிப் பாட நூல்கள் வாங்கப் பெற்றிருக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள நூல் நிலையங்களுக்கென 1972-73-ல் சுமார் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள தமிழ் நூல்கள் அரசுச் செலவில் சுமார் 200 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. அவைகள் கல்லூரிப் பாடத் தரமுடையனவாய் இருப்பினும், உயர்நிலை பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தித் தம் தகுதியையும் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவுவனவேயாகும்.

Age of Retirement of Teachers

*10 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government of India have suggested in their letter No. F1-5/67 ESE-6, that the age of retirement of teachers, who have received National Awards may be extended by five years subject to their being found physically and mentally fit;